தக்க நடவடிக்கைகளை எல்லாம் எடுக்க வேண்டும் என்றும், பார்வையிட்டதற்குப் பின் எப்படிப்பட்ட முறையிலே அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று எல்லாம் திட்டவட்டமான விதிமுறைகள் இருந்துவருகின்றன.

திரு. கா. காளிமுத்து : நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் எதிர்பாராத வகையில் திடீரென்று பார்வையிடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்வியமைச்சர் போகிற சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. வருகிறேன் என்று சொன்னால் எல்லாம் சரியாகத்தான் இருக்கும்.

Demands of Tamil Nadu Plantation workers

* 181 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Plaitation workers of Tamil Nadu including Anamalai and Nilgiris have given 22 demands through their unions; and

(*b*) if so, the steps taken by the Government to meet their demands?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளின் பேரில் சென்னையில் தொழிலாளர் நல ஆணையரும், கோவையில் தொழிலாளர் நல துணை ஆணையரும் பேச்சுவார்த்தை நடத்தியதன் பலனாக, 11—2—1971-ம் தேதி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி ஊதிய உயர்வு, மகப்பேறு நலன், பணிக்கொடை, வாராந்திர விடுமுறைக்கு ஊதியம், குறைந்த விலைக்கு அரிசி வழங்குதல் ஆகிய கோரிக்கைகள் தீர்த்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தியின் மூலம் 13—9—1971-ம் தேதி கோவை துணை ஆணையர் முன் தொழிலாளரின் குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பு, சம்பளத்தில் சந்தா பிடிப்பது ஆகிய கோரிக்கைகளைப் பற்றி உடன்பாடு ஏற்பட்டது.

மேற்கொண்டு நடந்த பேச்சு வார்த்தைகள் மூலம் 27—10—1971 அன்று வேலை மாற்றம், தோட்ட சுத்தி, தொழிலாளருக்குச் சீருடை, ஊக்குவிக்கும் ஊதியம், மேற்பார்வையாளரின் குறைகள், பதவி உயர்வு, சம்பளப் பட்டுவாடா, வீட்டு வசதி, இரவுப்படி, தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்குச் சீருடை, மகப்பேறு நலனுக்கு உதவி ஆகிய பிரச்சினைகளைப் பற்றி தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இருந்த போதிலும் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளைப்பற்றி கோவை துணை ஆணையரிடமிருந்து அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரு ஆண்டுக்காலமாக ஆனைமலை தோட்டத் தொழிலாளர் ஊதிய உயர்வுபற்றி கோரிக்கை வைத்து, பிறகு ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்து பிறகு அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரியாக 3 முறைகள் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. இப்பொழுது அதே

மாதிரி கோரிக்கைகள் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். கமிஷனர் அவர்களை அங்கே அனுப்பி இதற்கு விரைவிலே ஒரு முடிவு ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, 12 (3) அடிப்படையில் ஏற்படுத்தும் ஒப்பந்தம் எல்லாச் சங்கங்களையும் கட்டுப்படுத்தும். அப்படியிருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துப்படி ஆணையாளரை அனுப்பி அதற்கான முடிவு விரைவில் எடுக்கப்படும்.

திரு. சோ. கருணைநாதன்: தலைவரவர்களே, தொழிலாளர்களின் சில கோரிக்கைகளைச் சட்டப்படி ஏற்றுக்கொண்டுவிட்டபிறகு, அதைச் செயல்படுத்துவதற்கு தோட்ட முதலாளிகள் மறுக்கிறார்கள். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விவரங்களைத் தெரிவித்தால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்தத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எத்தனைபேர்? அங்கு செயல்படும் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை எத்தனை? இந்தத் தொழிற்சங்கங்களில் எத்தனை தொழிற்சங்கங்கள் இந்த உடன்பாட்டை ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டார்கள் என்பதை அறிவிப்பார்களா? அதோடு ஒத்துக்கொள்ளாத சங்கங்கள் எந்தெந்தக் காரணங்களுக்காக ஒத்துக்கொள்ளவில்லை என்று கூறுவார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு மணி நேரப் பேச்சுக்கான பெரிய கேள்விகளைப் போடுகிறீர்களே? இவ்வளவுக்கும் பதில் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, குன்னூர் தோட்டத் தொழிலாளர் அசோசியேஷனும், வால்பாறை தோட்டத் தொழிலாளர் சங்கமும், ஆனைமலை காப்பி மற்றும் தேயிலைத் தோட்டத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் சங்கமும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை என்று தெரிகிறது. எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, இந்தத் தோட்ட அதிபர்கள் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின் விளக்குகள் அமைத்துத்தர வேண்டும். ஆனால் இதுவரையில் நீலகிரி கிளெண்டல் எஸ்டேட் தவிர வேறு எந்த எஸ்டேட்டுகளுக்கும் மின் விளக்குகள் அமைத்துத் தரப்படவில்லை. அதற்காக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்த எஸ்டேட்டுகளில் சில பகுதிகளில் மின்துறை இலாகாவிலிருந்து அவர்கள் கேட்டிருந்த ஒத்துழைப்பு தரப்படவில்லை என்பதால் தாமதப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மின்துறையோடு தொடர்பு கொண்டு பரிசீலிக்கப்படும்.